**பத்திரிக்கை செய்தி**

**தமிழ்நாடு அரசு**

**வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

நாமக்கல் அரசு ஐ.டி.ஐ-யில் 2019 -2020ம் ஆண்டிற்கான மாணவர்/மாணவியர் சேர்க்கைக்கான அறிவிப்பு

தமிழ்நாடு அரசு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் நாமக்கல் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும், கொல்லிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும்(பழங்குடி இன மக்கள் மட்டும்) மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு அரசு ஒக்கீடு இடங்களுக்கும் (ஐ.டி.ஐ) 31.5.2019 முடிய பத்தாம் வகுப்பு தேர்ச்சி, பிளஸ்1 மற்றும் பிளஸ்2 தேர்ச்சி/தோல்வி அல்லது ஏதாவது ஒரு டிகிரி/டிப்ளமோ பெற்ற மாணவர், மாணவியர்களிடம் இருந்து **www.skilltraining.tn.gov.in** என்ற ஆன்லைன் மூலமாகவோ அல்லது நேரிலோ விண்ணப்பங்கள் வறவேற்கப்படுகின்றன.

இது குறித்து நமது நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஆசியாமரியம் அவர்கள் வெளியிட்ட செய்தி குறிப்பு: நாமக்கல் அரசு ஐ.டி.ஐ-ல் ஆண்கள்/பெண்களுக்கு இரண்டு ஆண்டு படிப்பாக எலக்ட்ரீசியன், டிராப்ட்ஸ்மேன்(சிவில்), மெஷினிஸ்ட் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கும், ஓராண்டு படிப்பாக மெக்கானிக் ஆட்டோபாடி ரிப்பேர் ஆகிய தொழிற்பிரிவிற்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பெண்களுக்கு மட்டும் ஓராண்டு படிப்பாக கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் & புரோகிராமிங் அசிஸ்டெண்ட் மற்றும் டெஸ்க்டாப் பப்ளிஸிங் ஆப்ரேட்டர் போன்ற தொழிற்பிரிவுகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் பயிற்சி கட்டணம் முற்றிலும் இலவசம், மாதம் ரூ.500/- உதவித்தொகை, இலவச லேப்டாப், சைக்கிள், பாடபுத்தகங்கள், சீருடை, காலணி, வரைபடக் கருவிகள் மற்றும் இலவச பஸ் பாஸ் ஆகியவை வழங்கப்படுகின்றன. பயிற்சி முடிந்தவுடன் மத்திய அரசால் தொழிற்தேர்வு நடத்தப்பட்டு தேசிய தொழிற் சான்று வழங்கப்படுகிறது. மேலும் முன்னனி நிறுவனங்கள் மூலம் கேம்பஸ் இன்டர்வியூ நடத்தப்பட்டு வேலைவாய்ப்பிற்கான உத்திரவாதம் வழங்கப்படுகிறது.

இப்பயிற்சிகளில் சேர விருப்பமுள்ளவர்கள் **www.skilltraining.tn.gov.in** என்ற ஆன்லைன் மூலமாகவோ அல்லது பரமத்திரோடு, டோல்கேட் அருகிலுள்ள கீரம்பூர் நாமக்கல் அரசு ஐ.டி.ஐ-க்கு ஒரு பாஸ்போர்டு சைஸ் போட்டோ, டி.சி நகல், பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல், ஜாதி சான்றிதழ் நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் நேரில் வருகை தந்தோ 31.5.2019-க்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு **04286-267976, 04286-267876, 9442053732, 8610530243** என்ற தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

த.அமானுல்லா பாஷா.B.E,
பயிற்சி அலுவலர்,
அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,
நாமக்கல் மாவட்டம்.